සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

# T/KIN/AS-SHUMS VIDYALAYAM

தரம் 08 முதலாம் தவணைப் பரீட்சை - 2020 16 T

சுட்டெண் ........................................................ **இஸ்லாம்** **நேரம் 2 மணித்தியாலம்**

- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- விடைத்தாளின் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்குக.
- இவ்வினாத்தாளுக்குரிய நேரம் இரண்டு மணித்தியாலங்களாகும

## பகுதி 1

**எல்லா வினாக்களுக்கும் விடைஎழுதுக**
மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க

1) “உன்னையே வணங்குகிறோம் உன்னிடமே உதவி தேடுகிறோம்”என்ற உறுதி மொழியை ஒரு முஸ்லிம் ஒரு நாளைக்கு சொல்ல வேண்டிய குறைந்த தடவைகள்
   1) பதினைந்து 2) பதினேழு 3) பதினெட்டு
2) “நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளை எண்ணிப் பார்ப்பீர்களாயின் அதை உங்களால் கணக்கிடவே முடியாது” இக்கூற்று
   1) அல்லாஹ்வினுடையது 2) நபியவர்களுடையது 3) ஸஹாபியினுடையது
3) “அல்லாஹ்வின் அருள் பூர்த்தியாக்கப்பட்டுவிட்டது”என்ற அல்குர்ஆன் வசனம் தரும் செய்தி
   1) அல்லாஹ் மாத்திரமே அருள் புரிபவன் 2) அல்லாஹ்வின் அருள் பூரணமானது
   3) அல்குர்ஆன் முழுமைப்படுத்தப்பட்ட இறுதிவேதம்
4) நபிமார்களுள் நூஹ்(அலை), இப்ராஹீம்(அலை), மூஸா(அலை),ஈஸா(அலை),முஹம்மத் (ஸல்) ஆகியோரைக் குறிக்கும் பொதுவான சொல்
   1) உலுல் அஸ்ம் 2) உலுல் குர்பா 3) உலுல் பழ்ல்
5) சுவனத்தின் திறவுகோல் எனஅழைக்கப்படும் கடமை
   1) நோன்பு 2) ஹஜ் 3) தொழுகை
6) மகிழ்ச்சிகரமான செய்தி கிடைத்தால் அல்லது ஏதாவது ஒரு காரியம் இலகுவாக அமைந்துவிட்டால் செய்ய வேண்டிய ஸஜ்தா
   1) ஸஜ்தா ஷுக்ர் 2) ஸஜ்தா திலாவத் 3) ஸஜ்தா ஸஹ்வு
7) இ.்.திகாப் இருப்பதற்கு நபியவர்கள் ஆர்வமூட்டப்பட்ட மாதம்
   1) ஷ.்.பான் 2) ரமழான் 3) துல் ஹஜ்
8) தூய்மை,வளர்ச்சி,அபிவிருத்தி,அருள் போன்ற கருத்துக்களைத் தரும் தருவது
   1) ஸதகா 2) நபகா 3) ஸக்காத்
9) மு.்.மின்களின் ஆயுதம் எனக் குறிப்பிடப்படுவது
   1) குர்ஆன் திலாவத் 2)திக்ர் 3)துஆ
10) அல்லாஹ் மாத்திரமே உதவி தேடத் தகுதியானவன் என உறுதியாக ஏற்று வாழ்தல்
   1) தவ்ஹீத் 2) ரிஸாலத் 3) மஆத் சார்ந்ததாகும்.

(2*10 = 20 புள்ளிகள்)


kalvi.lk

(ஆ) மிகப் பொருத்தமானவற்றை இணைக்குக

11) ஜுமுஆத் தொழுகை — A.இரவில் இறுதியாக நிறைவேற்றுவது
12) பர்ளு கிபாயா — B.ஜமாத்துடன் மாத்திரம் நிறைவேற்றுவது
13) வித்ர் தொழுகை — C.பள்ளியினுள் நுழைந்ததும் நிறைவேற்றுவது
14) ஸலாதுல் ஈதைன் — D.ஜனாஸாத் தொழுகை
15) தகிய்யதுல் மஸ்ஜித் — E.பெருநாள் தொழுகை

2*5=10 புள்ளிகள்

(இ) பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக

16) தொழுகையில் தக்பீர் கட்டியதும் முதலாவதாக ஓதும் பர்ழான ஓதல்………………………………………………………………………...ஆகும்
17) கலீமுல்லாஹ் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டு அழைக்கப்படும் நபி……………………………………………………………………….(அலை) ஆவார்
18) நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட முஃஜிஸாத் ……………………………………ஆகும்
19) மிகவும் மன்னிப்பை ஏற்பவன் என்ற கருத்துக்குரிய திருநாமம் ……………… என்பதாகும்
20) அல்குர்ஆனில் தொழுகையுடன் இணைத்து வலியுறுத்தப்பட்ட ஒரே கடமை………………………………………………………………………ஆகும்.

2*5=10 புள்ளிகள்

## பகுதி -2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக

(01)

I. இஸ்லாமிய நம்பிக்கையின் பிராதான மூன்று அடிப்படைகளும் எவை?
II. அல்லாஹ்வின் அன்புடன் தொடர்பான மூன்று அஸ்மாக்களைத் தருக?
III. அல்லாஹ் ஒருவனிடம் மாத்திரம் உதவி தேடுவதால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக

(2+4 +6 = 12 புள்ளிகள்)

(02)

I. அல்குர்ஆன் முழுமையாகப் பாதுகாப்பு பெற்றது என்பதைக் காட்டும் குர்ஆன் வசனமொன்றை எழுதுக
II. அல்குர்ஆன் இறுதி வேதம் என்பதற்கான நியாயங்கள் மூன்று தருக
III. அல்குர்ஆனின் உள்ளடக்கத்தின் ஐந்து பிரதான தலைப்புக்களும் எவை

(2+4 +6 = 12 புள்ளிகள்)

(03)

I. நபிமார்களிடம் காணப்பட்ட உயர்ந்த பண்புகள் நான்கு தருக
II. வேதம் வழங்கப்பட்ட ரஸூல்மார்கள் நால்வரதும் பெயர்களைத் தருக
III. மூன்று ரஸூல்மார்களைக் குறிப்பிட்டு அவர்களுக்கு வழங்கப்பட்ட முஃஜிஸத்துக்கள் மூன்றினையும் குறிப்பிடுக

(2+4 +6 = 12 புள்ளிகள்)


kalvi.lk

(04)

I. தொழுகையின் இரு வகைகளையும் குறிப்பிட்டு அவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக

II. பின்வரும் தொழுகைகளை ஜமாஅத்தாகத் தொழக்கூடியவை,தனித்துத் தொழக்கூடியவை என வகைப்படுத்துக
(கிரகணத் தொழுகை, ஜனாஸாத் தொழுகை,தஹிய்யதுல் மஸ்ஜித்,தராவீஹ் தொழுகை, ஸலாதுல் ஹாஜா,பெருநாள் தொழுகை,ளுஹாதொழுகை,)

III. தொழுகையை முறையாக நிறைவேற்றுவதால் கிடைக்கும் உலகியல் பயன்கள் மூன்று தருக

(2+4 +6 = 12 புள்ளிகள்)

(05)

I. ஸஜ்தாவின் சிறப்பினைக் காட்டும் ஒரு ஹதீஸை எழுதுக

II. ஸஜதாவின் வகைகளுள் இரண்டைக் குறிப்பிடுக

III. ஸஜதா ஸஹ்வை நிறைவேற்ற வேண்டிய சந்தர்ப்பங்கள் மூன்றினைத் கூறுக.

(2+4 +6 = 12 புள்ளிகள்)

(06)

I. ரமழான மாதத்தின் சிறப்புக்கள் இரண்டு தருக

II. ஸக்காத், ஸதகாஆகிய இரண்டிற்கும் இடையில் உள்ளவேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக

III. நீர் கற்ற ரமழானில் கடைப்பிடிக்க வேண்டிய நீர் கற்ற நல்லமல்கள் ஆறு தருக

(2+4 +6 = 12 புள்ளிகள்)

(07)

I. துஆ என்பதன் மூலம் நீர் யாது விளங்கிக் கொள்கின்றீர்

II. துஆவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இரு ஹதீஸ்களைக் குறிப்பிடுக

III. துஆக் கேட்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் ஆறினை எழுதுக

(2+4 +6 = 12 புள்ளிகள்)

(பகுதி 1 இற்கு 40 புள்ளிகள் பகுதி 11 இற்கு 60 புள்ளிகள் மொத்தம் 100

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page